2011 ஆகஸ்ட் 30]

சொந்தக் கட்டடமாகக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, இளையான்குடி தாலுகாவிலுள்ள குறிச்சி என்ற ஊரில் Q1255 குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் செயல்பட்டு வருகிறது. இந்தப் பகுதியில் தற்போது கூட்டுறவு நாணயச் சங்கம் ஏதும் இல்லை. Q1255 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்தச் சங்கத்திற்கென சொந்தமாக 20 சென்ட் நிலம் உள்ளது. இதில் 12 சென்ட் அளவிற்கு பழைய கட்டடம் ஒன்றும், 8 சென்ட் அளவிற்குக் காலி மனையும் உள்ளது. கட்டடம் கட்டும் அளவிற்கு சங்கத்தின் நிதி ஆதாரம் தற்போது இல்லை. எனினும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட நபார்டு வங்கியின் ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதித் திட்டத்தின்கீழ் உதவி பெற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி கூட்டுறவு கடன் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட நிதி பெறப்பட்டவுடன், குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், அங்கே கட்டடம் கட்டப்படும் என்று அறிவித்ததற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியினைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் ப. சிவக்கொழுந்து, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

[2011 ஆகஸ்ட் 30

70—

புறவழிச் சாலை

***1611—திரு. ப. சிவக்கொழுந்து:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன். பண்ருட்டி நகரில் பண்ருட்டி–உளுந்தூர்பேட்டை மார்கத்தில் புற வழிச் சாலை அமைக்க ஆய்வு செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து அவர்கள்.*

திரு. ப. சிவக்கொழுந்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி–சித்தூர் சாலை என்று சொல்லக்கூடிய அந்தச் சாலையிலே, புறவழிச் சாலை அமைப்பது குறித்த கருத்துரு ஆய்விலே உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். பண்ருட்டி நகரம் இன்று நெருக்கடியிலே உள்ளது; போக்குவரத்து நெருக்கடியிலே உள்ளது; அந்தக் கடை வீதி வழியாகத்தான் கரும்பு டிராக்டர்கள் செல்ல வேண்டிய சூழ்நிலையும் உள்ளது. கிட்டத்தட்ட 19 பள்ளிகளும், 52 திருமண மண்டபங்களும் உள்ளன. 30,000 மாணவர்கள் அந்த கடை வீதி வழியாகத்தான் பள்ளிகளுக்குச் செல்ல வேண்டியுள்ளதால், விரைவிலே அந்தப் புறவழிச் சாலையை அமைத்துத் தர அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

2011 ஆகஸ்ட் 30]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் பண்ருட்டி–உளுந்தூர்பேட்டை மார்கத்தில் புறவழிச் சாலை சுமார் 4 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட வேண்டும். இதில் 1.50 கி.மீ. சாலை பண்ருட்டி நகராட்சி சாலை ஆகும். மீதமுள்ள பகுதி பட்டா நிலமாக உள்ளது. இந்த பட்டா நிலங்களை நில ஆர்ஜிதம் செய்ய சுமார் ரூபாய் 42 கோடி தேவைப்படும். இத்தொகை சாலை மேம்பாட்டுச் செலவைவிட 3 மடங்கு அதிகமாக உள்ளது. நிலத்தைக் கையகப்படுத்திய பின்னர் புறவழிச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. கணேசன் அவர்கள்.*

முற்பகல் 10–35

திரு. பா. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எங்கள் ஆராதனைக்குரிய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, உத்திரமேரூர் தொகுதி, ஒரக்காட்டேபேட்டையில் பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம், 1993 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசிலே கட்ட தொடங்கப்பட்டது. பல்வேறு காரணங்களால் பணி நிறுத்தப்பட்டது. இதனால் 20–க்கும் மேற்பட்ட கிராம மக்கள் 15 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வரவேண்டிய நிலைமை உள்ளது. தற்போது அந்தப் பாலாற்றில் நெடுஞ்சாலைத் துறையின்மூலம் உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டும். கடந்த கால தி.மு.க. மைனாரிட்டி அரசால், 2008 ஆம் ஆண்டு ஒன்றியச் சாலைகளில் பாலம் கட்டத் தடையாணைப் பிறப்பிக்கப்பட்டது. மாண்புமிகு தாயுள்ளம் படைத்த அம்மா அவர்கள் அந்த ஒரக்காட்பேட்டை தரைப்பாலத்தை உயர்மட்டப் பாலமாகக் கட்டித் தர வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஊராட்சி ஒன்றியச் சாலையாக இருக்கின்ற காரணத்தினாலே, பாலம் கட்ட தற்போது இயலாது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய*

கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

71—

வட்டம்

***1725—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், அந்தியூர் பகுதியைத் தனி வட்டமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், அந்தியூர் பகுதியைத் தனி வட்டமாக அறிவிப்பது குறித்து, மாண்புமிகு அம்மாவினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கம் கண்ட தமிழ் மண்ணில், ஸ்ரீரங்கம் கண்ட தமிழ்த் தாயே, உலக வரலாற்றில் ஒப்பிலாத் தலைவியான, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் தனிப் பெரும் சக்தியான (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதி 32 கிராம ஊராட்சிகளையும், 5 பேரூராட்சிகளையும் மற்றும் பர்கூர் மலைக் கிராமத்தையும் உள்ளடக்கிய தொகுதியாகும். சுமார் 1 இலட்சத்து 80 ஆயிரம் வாக்காளர்கள் இந்தத் தொகுதியிலே இருக்கின்றனர். எனது தொகுதியில் உள்ள மக்கள் சான்றிதழ்கள் மற்றும் பல்வேறு